## தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசோட்டத்தினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் நிலையான வைப்பிற்கான மொத்த வட்டி வருமானம் ரூபா 516,827 ஆன போதிலும் இது ரூபா 447,313 தொகையாக கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் வட்டி வருமானம் ரூபா 69,514 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. பேரேட்டிலும் நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கும் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் | ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறை நிதியத்தின் அமைச்சுகளுக்கிடையேயான |

| | | |
|---|---|---|
| | வழிகாட்டிகளின் 11.1 ஆம் பந்தி | கண்காணிப்புக் குழு கூட்டப்பட்டு நன்கொடை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய சிறுவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. மீளாய்வாண்டின் போது அக்குழு ஒரு முறை மாத்திரம் கூடியிருந்ததுடன் சிறுவர் அபிவிருத்தி நிதி அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 153 விண்ணப்பங்கள் தொடர்பாக கருத்திற்கொள்வதற்கு அப்போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.4(ஆ) பந்தி | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களும் கணக்காண்டு முடிவுற்று 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபட்டிருக்க வில்லை. |
| (இ) | 2007 மார்ச் 23 ஆம் திகதிய பீஎப்/எப்எஸ்/நிதியம்/எம்ஏ/ 25/05 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | கடிதத்தில் இருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம், நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>‘‘தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்திற்கான ஓர் வரைவு அதிகாரச்சட்டம் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் அவ் வேண்டுகோளுக்குரிய அமைச்சரவைத் தீர்மானம் இரத்துச்செய்யப்பட்டமையால் புதிய அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. குழந்தைப் பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான நம்பிக்கைப் பொறுப்பு |

நிதியமும் இந்த அமைச்சின் கீழேயே காணப்படுவதனால் இவ்விரு நிதியங்களுக்காகவும் ஒரு ஒருங்கிணைந்த நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு ஏற்ற அதிகாரச்சட்டத்தைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சரின் கையெழுத்துடனான அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகரித்திருந்த போதிலும் பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டிராமையால் இரு நிதியங்களையும் ஒருங்கிணைப்பதற்கான தேவைப்பாடு இல்லை. எதிர்காலத்தில் சிறுவர் அபிவிருத்தி நிதியம் தனியான ஒரு நிதியமாக மீண்டும் அமைச்சரவை அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்து ஓர் அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக செயலாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.”

### 1.2.3 போதிய அதிகாரத்தால் சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2009 ஆகஸ்ட் 14 ஆம் திகதி முதல் வருடாந்தம் முதிர்ச்சியடையும் வகையில் ரூபா 02 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பை ஆரம்பிப்பதற்காக அமைச்சுக்களுக்கிடையிலான உப குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 244,244 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 600,122 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 844,366 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது புத்தக வருமானமும் ஏனைய வருமானமும் முறையே ரூபா 67,840 ஆலும் ரூபா

713,360 ஆலும் குறைவடைந்தமை நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மார்ச் 01 ஆம் திகதி இடம்பெற்ற உலக சிறுவகர் தினம் தொடர்பாக வெளியிடப்பட்ட கொடி விற்பனையின் பின்னர் பணத்தை அறவிடுவது தொடர்பாக நிலவிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறையில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

I. கொடி விற்னனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம், அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படுகையில் நேரடியாக வங்கிக் கணக்கிற்கோ அல்லது அமைச்சிற்கோ அனுப்பும் இரு முறைகள் காணப்பட்டன.

II. வங்கிக்கு நேரடியாக அனுப்பிவைக்கும் பணத்தை இனங்கண்டுகொள்ளும் நிலையான முறையொன்று இருக்கவில்லை.

III. கொடியொன்றிற்கு நிரந்தர விலை நிர்ணயிக்கப்படாமையின் அடிப்படையில் கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணம் முழுவதும் எவ்வளவு என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் முறை இருக்கவில்லை.

(ஆ) தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டிக் கோவையின் 4(5) ஆம் பந்தியின் பிரகாரம் இலக்கிடப்பட்ட நிதியத்தின் அளவை 2008 திசெம்பர் அளவில் ரூபா 50 மில்லியன் தொகை வரை அதிகரிப்பது இலக்காக இருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் பெறுமதி ரூபா 6,152,422 மாத்திரமேயாகக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பு நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும்

2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நிதியத்தின் குறிக்கோள்களை

அடைந்துகொள்வதற்குரிய முறைமைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத்திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டின் போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் உள்ளபடியான அடைந்து கொள்ளல் மீது முறையான மதிப்பீடு மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானம்